1989 மார்ச் 29]

நிரந்தர ஊழியர்கள் என்று அரசு அறிவித்திருப்பினும், தேர்தல் நேரத்தில் இப்போது ஆளும் கட்சியாக இருக்கின்ற கட்சி அவர்களை அரசு ஊழியர்கள் என்று அறிவிப்போம் என்று தான் சொன்னது, எனவே, அவர்களை முழு நேர நிரந்தர ஊழியர்களாக அறிவித்து அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அனைத்து சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க அரசு திட்டமிடுமா ?

இரண்டாவதாக திருக்குறள் போன்றவற்றை அவர்கள் கற்றுக் கொடுக்கிற பள்ளியோடு தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் முழுமையாக அவர்களைக் கல்வி இலாக்காவிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்து, இரண்டு துறைகளுக்கும் அதாவது ஊராட்சி ஒன்றியத்திற்கும் அதிலே ஒரு கண்காணிப்பு உரிமை கொடுத்து முன்போலவே அவர்களுக்கு கல்வி இலாக்காவோடு தொடர்பு ஏற்படுவதற்குரிய வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிரு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டம் இரண்டு கட்டமாகச் செயல்படுகிறது. இரண்டு வயதுக்கு மேற்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை உள்ளடக்கிய குழந்தைகள் நல மையம் என்ற அடிப்படையிலும், ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கிற ஆரம்பப்பள்ளி, நடுத்தரப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலுகிற மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும் இப்படி இவை இரண்டு கட்டமாகச் செயல் படுகிறது. இந்த மையத்திலே பணியாற்றுகிற குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு, சத்துணவு அமைப்பாளர்களைக் காட்டிலும் ஊதியம் சற்று கூடுதலாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இவர்களை உள்ளாட்சி மன்றத்தின் கீழ் கொண்டு வருவதா, வேண்டாமா என்ற ஒரு பரிசீலனை அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

(முற்பகல் 9-50)

மைய, மாநில அரசுகள் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள்.

11—(*வினா எண் 86) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 முதல் 1988 வரை மைய அரசும் மாநில அரசும் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள் யாவை ?

(ஆ) அவற்றில் மாநில அரசு பங்குவீதம் செலுத்தாததால் நிறைவேறாத திட்டங்கள் எவையேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: விடை: (அ) 1977 முதல் 1988 வரை மைய அரசும் மாநில அரசும் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

(1) மாவட்டத் தொழில் மையங்களை நிறுவுதல்.

(2) சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான தர நிர்ணயச் சான்றிதழ் வாங்குவதற்கு மானியம் வழங்கும் திட்டம்.

(3) தொழில் கூட்டுறவு கயிறு சங்கங்களுக்கு உதவி செய்யும் திட்டம்.

(4) மாவட்டத் தொழில் மையங்களுக்குத் தேவையான கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் வாங்கத் தேவையான நிதி உதவி செய்தல்.

(5) மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக சிறு தொழில் முனைவோருக்கு நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற ஏதுவாக விளிம்புத் தொகை (Margin Money) நிதியுதவித் திட்டம்.

(6) நலிவுற்ற சிறு தொழில் மையங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்கான விளிம்புத் தொகை நிதியுதவித் திட்டம் (Margin Money Assistance)

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய பங்கு வீதம், இது வரை அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களிலும் மைய அரசினுடைய பங்கு வீதம் எவ்வளவு? மாநில அரசு செலுத்திய பங்கு வீதம் எவ்வளவு? இந்த இரண்டும் முறையாகச் செலவு செய்யப் படுகிறதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசும், மத்திய அரசும் 50, 50 என்ற சதவீதத்தின் அடிப்படையில் பங்கு வீதம் வழங்கப் பட்டு முறையாக செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு கிராமத்தை, மாதிரி கயிறு கிராமமாக எடுத்துக்கொண்டு, மத்திய அரசும், மாநில அரசும் முதலீடு முடக்கி அங்கே கயிறு தொழிலை மேம்படுத்த திட்டங்கள் போடப்பட்டு அவை எந்த நிலையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 மார்ச் 29]

மாண்புமிமி திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு தொழில் பற்றிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இங்கே கூட்டுறவு, கயிறு தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் நிதி வழங்குகிற அந்த விகிதம் மட்டும்தான் தரப்பட்டிருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட அந்த வினாவிற்கு விடை பெற தனிக் கேள்வியாக போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்காக சராசரி ஆண்டு ஒன்றுக்கு அல்லது கடந்த 1988-89 ஆம் ஆண்டுக்கு மைய அரசிடமிருந்து கிடைத்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1987-88க்கு வழங்கப்பட்ட நிதி உதவி திட்டவாரியாக தரப்பட்டிருக்கிறது. எனவே, ஒட்டு மொத்தமாக மத்திய மாநில அரசினுடைய பங்கைப் பற்றி தெரிய விரும்பினால், உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களிலே ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசு மான்யம், மாநில அரசு மான்யம் எவ்வளவு ? ஆர். எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் மாநில அரசு மான்யம் எவ்வளவு, மத்திய அரசின் மான்யம் எவ்வளவு ? என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசு மான்யம், மாநில அரசு மான்யம் எவ்வளவு என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்காக தனிக் கேள்வி எழுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மூலமாக இதுபோன்ற நிதிகள் மூலம் ஏழைகளுக்கு சுயவேலைவாய்ப்பு திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டாலும், அவர்கள் வங்கிகளை அணுகுகிறபோது அவர்களுக்குத் தொகை வழங்கப்படுவதில்லை. அதற்காக தனி நடவடிக்கை எடுக்கும் குறிப்பு அரசினுடைய கவனத்தில் இருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் தொடங்க விருப்பம் உடையவர்கள் அங்கங்கே இருக்கக்கூடிய மாவட்டத் தொழி

மையங்களை அணுகி தாங்கள் தொடங்க இருக்கின்ற தொழில் பற்றிய விவரங்களைத் தந்து அதற்கான விளக்கங்களையும் தந்து, அவர்கள் வந்து அந்த இடத்தைப் பரிசீலனை செய்து, அதற்கான வாய்ப்பு உண்டா என்பதை ஆராய்ந்து, அவர்கள் தருகின்ற அந்தத் தகுதி சான்றுகள் பெற்றதற்குப் பின்னால் அந்தந்த மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு போதிய அளவுக்கு நிதி உதவி தரப் பட்டிருக்கிறது. எங்காவது நிதி உதவி கிடைக்காத நிலைமை ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசி னுடைய கவனத்திற்கோ அல்லது அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மாவட்டத் தொழில் மையங்களுடைய கவனத் திற்கோ எடுத்துச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கக்கூடிய இந்தச் சிறு தொழில்கள் தொடங்க, அந்த நிலையங்களிலிருந்து கடனைப் பெறுபவர்கள் கடனைத் திருப்பி முறையாகச் செலுத் தாமல் விட்டுவிடுவார்கள் என்பதற்காக மானியத்தை மட்டும் வழங்கிவிட்டு கணக்கிலே போக்குவரத்து செய்துவிட்டு அந்தச் சிறுதொழில்கள் செய்பவர்களுக்கு உரிய தொகை போய்ச் சேராமல் இருக்கிறது. அதனால் அவர்கள் பயன் அடையாமல் இருக்கக்கூடிய நிலை இருப்பதை அரசு அறியுமா ? அது குறித்து என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற குற்றச்சாட்டுகள் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. எங்காவது இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருந்தால் அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஐ.ஐ.சி.யிலிருந்து லோன் ரெகமண்ட் செய்தால் வங்கியிலே கொடுக்காமல் இருக்கிறார்கள். வங்கியிலே கேட் டால் அதற்கு ஒரு சட்டம் இல்லை என்று சொல்கிறார்களே, உண்மையா ? அவர்கள் அப்படிச் சொல்கின்றார்கள் என்றால் ஒரு சட்டம் கொண்டு வந்து டி.ஐ.ஐ.சி. ரெகமண்ட் செய்தால் அதைக் கண்டிப்பாக வங்கி கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களால் பரிந்துரை செய்யப்பட்டு சிறுதொழில்களுக்குக்

1989 மார்ச் 29]

கடன் உதவி மறுக்கப்பட்டதாக இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதாவது மறுக்கப்படுமானால், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மீண்டும் பரிந்துரை செய்து அந்தக் கடன் உதவிகளைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் நிறைவேற, மத்திய மாநில அரசுகள் கடந்த 10 ஆண்டுகளில் வழங்கிய மானியங்கள் எவ்வளவு ? ஏதாவது மானியம் டைவர்ட் செய்யப்பட்டுள்ளதா ? அப்படி செய்யப்பட்டிருந்தால் எத்தனை சதவிகிதம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற திட்டங்களுக்கு, மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஆகும் செலவுத் தொகையை மத்திய மாநில அரசுகள் 50:50 என்கிற விகிதத்தில் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 4 லட்சம் ரூபாய், இதில் எது குறைவோ அது மாநில அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் தொகை 1980 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து கூடுதலாகிக் கொண்டு வருகிறது. மேலும், இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எங்கேயும் எதுவும் மாறுதல் செய்யப்படவில்லை. டைவர்ட் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் தட்டுப்பாட்டை நீக்க கூட்டுறவு ஆலைகள்.

12—(*வினா எண். 114) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசிடம் எந்தவிதமான உத்தேசமும் இல்லை.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு ஆலைகளை உண்டாக்குவது என்பது நடைமுறைக்கு வர சாத்தியம் இல்லாத ஓர் ஏற்பாடு. குறைந்தபட்சம், நடுத்தரமான நூற்பாலையை